**OS No.6 /2021**

PW 1 – அர்ஜுனன்

நாள் 12.03.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

என் தகப்பனார் பெயர் ராமலிங்கம். என் தாயார் பெயர் சிவகாமியம்மாள். என்னுடன் பிறந்தவர்கள் 5 பேர். என்னைச் சேர்த்து 6 பேர். ஆண்மக்கள் 2 , பெண் மக்கள் 4 பேர்கள் ஆவார்கள். ஆண் மக்கள் நானும், பஞ்சவர்ணம் என்ற சகோதரரும் ஆவோம்.

பெண்மக்கள் சாரதாம்பாள், கண்ணம்மாள், மீனாட்சியம்மாள் மற்றும் ஆறுமுகத்தம்மாள் ஆகியோர்கள். கண்ணம்மாள் இறந்துவிட்டார் மற்றவர்கள் உயிருடன் உள்ளார்கள்.

துத்திகுளம் கிராமத்தில் கடந்த 28.01.1921 ம் தேதி என் தகப்பனார் இரண்டு இலக்க சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளார். என் தகப்பனார் இரயில்வேயில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். நான் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றேன்.

வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்ட சொத்தைப் பொறுத்து என் உடன் பிறந்த அனைவரையும் கட்டுப்படுத்தி பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்ட சொத்தைப் பொறுத்து இதுவரையில் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

உங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து உங்கள் சகோதரர் பஞ்சவர்ணம் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளாரா என்றால் போட்டுள்ளார். மேற்படி வழக்கானது மாண்பமை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

மேற்படி மேல்முறையீட்டு வழக்கை நான் தான் தாக்கல்

செய்துள்ளேன். மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் தாவா வழக்கில் உள்ள சொத்துக்கள் உண்டா என்றால் கிடையாது. மாண்பமை உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு சம்பந்தப்பட்ட பிராது நகலையோ, தீர்ப்பு நகலையோ தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் இல்லை.

வா.சா.ஆ 1 ஆவணத்தை என் தகப்பனார் அழகர்சாமி என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார். மேற்படி அழகர்சாமிக்கு எப்படி பாத்தியம் என்றால் அவர் வேறு ஒருவரிடம் கிரயம் வாங்கியுள்ளார். அழகர்சாமி மீனாட்சியம்மாள் என்பவரிடம் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான்.

மீனாட்சியம்மாளுக்கு 18.10.1972 ம் தேதியிட்ட பாத்தியப்பட்ட சொத்தைத் தான் அழகர்சாமி கிரயம் பெற்றுள்ளார். வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்ட சொத்தில் கீழ்புறத்தில் அழகர்சாமியிடம் இருந்து என் அப்பா கிரயம் வாங்கினார். அது 1972 ல் கிரயம் வாங்கப்பட்டது.

கீழ்புறம் வாங்கப்பட்ட சொத்தைப் வா.சா.ஆ 1 ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை நான்குமாலில் காண்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ 1 ஆவணத்தில் கீழ்புறம் 1972 ல் கிரயம் பெற்றது தவறு என்றும் அது வடபுறத்தில் உள்ளது என்று சொனனால் சரியல்ல.

வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள மொத்த சொத்திற்கும் ( இரண்டு இலக்க சொத்திற்கும் ) கீழ்புறம் ரோடு உள்ளது. இரண்டு இலக்க சொத்திற்கும் தென்புறம் 6 அடி பாதையும் அதற்கு தென்புறம் கருப்பையாபிள்ளை என்பவர் இடம் உள்ளது.

கீழ்புறம் உள்ள ரோட்டிற்கு கீழ்புறம் லெட்சுமனபிள்ளை என்பவர் வீடு உள்ளது. லெட்சுமனபிள்ளை வீட்டில் அவரது மக்கள்

குடியிருந்து வருகிறார்களா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் 2004 ல் பணி ஓய்வு பெற்றேன். அன்றைய தேதியில் இருந்து திருப்புவனத்தில் குடியிருந்து வருகிறேன்.

எனது சொந்த ஊர் அன்னியேந்தல் ஆகும். வா.சா.ஆ 1 ஆவணத்தில் கீழ்புறம் 1 வது இலக்க சொத்தும் மேல்புறம் 2 வது இலக்க சொத்தும் உள்ளது. வா.சா.ஆ 1 ஆணத்தில் 1 வது இலக்க சொத்தில் கிழமேல் 68 அடியும் தென்வடல் 19 அடியும் உள்ளது. 6 அடி பாதை தனியாக உள்ளது. 2 வது இலக்க சொத்தின் கிழமேல் 11 அடியும் தென்வடல் 44 அடியும் கண்டுள்ளது. அது 6 அடி பாதையை சேர்க்காமல்.

2 வது இலக்க சொத்திற்கு மேற்கே உங்கள் அப்பாவிற்கு கிரயம் கொடுத்த அழகர்சாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சொத்து இல்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் கிரயம் கொடுத்த அழகர்சாமி தன் கைவசம் இடத்திற்கு என்று சில இடத்தை வைத்துக்கொண்டு தான் கீழ்புறத்தில் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள 1, 2 இலக்க சொத்துக்களை கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதன் மேற்கு பகுதியில் கால்வாய் உள்ளது. அவருக்கு இடம் இல்லை.

மீனாட்சியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் அசல் ஆவணம் என்னிடம் இல்லை. என்னிடம் காட்டப்படும் 18.10.1972 ம் ஆண்டில் கிரயம் வாங்கிய பத்திரத்தின் சான்றிட்ட நகலா என்றால் எனக்குத் தெரியாது. அழகர்சாமி 1972 கிரய பத்திரத்தின் அடிப்படையில் கிழமேல் ஜாதியடி 150 அடியும், தென்வடல் ஜாதியடி 50 அடியும் கிரயம் பெற்றுள்ளார் என்றால் அளவு தவறு. கிழமேல் ஜாதியடி சுமார் 110 அடி வரும்.

பூமியில் இன்று வரையில் கிழக்கில் உள்ள ரோட்டில்

இருந்து மேற்கே உள்ள புது கால்வாய் வரை கிழமேல் 150 அடி பூமியில் உள்ளது என்றும் அந்த சொத்து தான் அழகர்சாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் கீழ்புறம் உள்ள மெயின் ரோட்டில் இருந்து என் அப்பாவிற்கு எழுதிக்கொடுத்த இடமானது கால்வாயுடன் முடிகின்றது.

வா.சா.ஆ 1 கிரயம் பெற்ற காலகட்டத்தில் எங்களுக்கு கிரயம் கொடுத்த அழகர்சாமிக்கு எங்களது சொத்திற்கு மேல்புறத்தில் கிழமேல் 70 அடியும் தென்வடல் 50 அடியும் பாத்தியப்பட்டு இருந்தது என்றும், அதை கைவசம் வைத்துக்கொண்டு தான் இதர பகுதியை என் தகப்பனாருக்கு கிரயம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ 1 ஆவணத்திலேயே என் தகப்பனாருக்கு கிரயம் கொடுத்த அழகர்சாமிக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களை கைவசம் வைத்துக்கொண்டு கீழ்புறம் உள்ள சொத்தைத் தான் எனது தகப்பனாருக்கு கிரயம் கொடுத்துள்ளார் அந்த விபரம் வா.சா.ஆ 1 ல் குறிப்பிட்டுள்ளதுற்கு மாறாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் வாங்கிய சொத்திற்கு மேல்புறத்தில் கால்வாய் உள்ளது என்று பிராதில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். உங்கள் பிராது சொத்து விபரத்தில் மேற்கே நத்தம் புல எண் 11/13 உள்ளதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் புல எண் 11/13 வடக்கே பழனிச்சாமிக்கு பாத்தியப்பட்டது.

உங்கள் பிராது சொத்து விபரத்தில் மேற்கே நத்தம் புல எண் 11/13 உள்ளதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புல எண் 11/13 ற்கு மேற்கே தான் கால்வாய் உள்ளது என்றால் தவறு.

வா.சா.ஆ 1 ன் அசல் ஆவணம் தொலைந்துபோய்விட்டது.

அதை நான் பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். கால்வாயின் சர்வே எண் எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 6 புலவரைபடத்தில் புல எண் 19 க்கு மேற்கேயும், வடக்கேயும் புல எண் 13 காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

வா.சா.ஆ 1 ஆவணப்படி 1 வது இலக்கத்தில் கிழமேல் 68 அடியும் தென்வடல் 19 அடியும், இரண்டாவது இலக்க சொத்தில் கிழமேல் 11 அடியும் தென்வடல் 44 அடியும் உள்ளது. பாதையை சேர்க்காமல் மொத்தம் கிழமேல் 79 அடி எங்களுக்கு பாத்தியப்பட்டது ஆகும்.

உங்கள் பிராதில் வரைபடத்தில் வடக்கே புல எண் 249 என்று காண்பிக்கப்பட்டுள்ளது தவறாகும். உத்தேச வரைபடத்தில் தெற்கே புல எண் 11/13 என்று காண்பிக்கப்பட்டுள்ளதும் தவறாகும். மேற்கே புல எண் 11/13 என்று காண்பிக்கப்பட்டுள்ளதும் தவறாகும்.

உத்தேச வரைபடத்தில் கண்ட கிழமேல் 21 அடி, தென்வடல் 33 ½ அடி என்று எந்த ஆவணத்தின் அடிப்படையில் போடப்பட்டுள்ளது என்றால் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள சொத்தின் அடி அளவுகள் உத்தேச வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை.

உத்தேச வரைபடம் தவறு என்பதால் ஆவணத்தை வேண்டும் என்று குறியீடு செய்யவில்லை என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்ட சொத்தைப் பொறுத்து நீங்களும் உங்கள் சகோதரரும் எப்போது பாகம் பிரித்துக்கொண்டீர்கள் என்றால் 2009 ல் பாகம் பிரித்துக் கொண்டோம். எனது சகோதரிக்கு மொத்த சொத்தில்

கீழ்புறத்தில் உள்ள சொத்தை என் சகோதரி கண்ணம்மாளுக்கு என் அப்பா கொடுத்தார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**